**05.04.2025**

**O.S.No.48/2012 மற்றும் 156/2016**

**பி.வா.சா.2 : துரைசாமி**

<u>**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**</u>

1) நான் நத்தக்கரையை வசித்துவருகிறேன். வழக்கு நடக்கு சொத்து பட்டுத்துறை கிராமத்தில் உள்ளது. பட்டுத்துறை கிராமத்திற்கும், நத்தக்கரைக்கும் சுமார் 6 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். வழக்கு சொத்து உள்ள கிராமத்தில் எனக்கு வீடோ நிலமோ இல்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தப்பட்ட சொத்தின் கிரைய பத்திரங்கள் எதிலும் நான் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். உயிலில் கையெழுத்து போட்டுள்ளேன்.

2) வழக்கின் சொத்துக்கள் என்ன என்ன சர்வே எண், எவ்வளவு வீஸ்தீரணம் உள்ளது போன்ற விவரங்கள் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள சர்வே எண், வீஸ்தீரணம் போன்ற விவரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் 11 பக்கங்களில் தட்டச்சு செய்து வைத்து இருந்ததில் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான்.

3) ஆரோகியம் எனது உறவினர் அல்ல. அவர் குடும்பத்தில் அவர் அப்பா காலத்தில் இருந்து நான் நல்லது கெட்டதுக்கு போயி இருக்கிறேனா என்றால் சென்று உள்ளேன். 05.11.1987 ல் நடந்த குடும்ப பைசலில் நான் கலந்து கொண்டேன். அவ்வாறு பைசல் பேசியது சம்பந்தமாக அங்கு எந்த ஆவணமும் எழுதப்படவில்லை, கையெழுத்தும் வாங்கவில்லை. பணம் கொடுத்தற்கும் வாங்கியதற்கும் எந்த ரசீதும் எழுதி வாங்கப்பட்டவில்லை. கொடுத்தவரும் எழுதி வாங்கவில்லை. வாங்கியவரும் எழுதிக்கொடுக்கவில்லை.

4) 05.11.1987ல் நடந்த பைசலில் நான் கலந்து கொண்டதாகவும், பணம் கொடுத்தாகவும், அவர் பெற்றுக்கொண்டதறாகவும், நான் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் பொய் என்றும், ஆரோக்கியம் சொல்லிகொடுத்தாகவும் சொல்லி கொடுத்தற்கு இணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டுத்துறையில் கிராமத்தில் ஊர் முக்கியஸ்தர்கள், பொதுவர்கள் இருக்கிறார்கள். நான் சொல்லும் 05.11.1987 பைசலில் அந்த ஊர் முக்கியஸ்தர்கள் யாரையும் அழைக்கவில்லை. ஊர் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவில்லை.

5) பட்டுத்துறை கிராமத்தில் இருந்து 1 கி.மீ. தூரத்தில் தலைவாசல் சார் பதிவாளர் அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். அங்கு பத்திர எழுத்தர்கள் சமார் 10-15 பேர் உள்ளனர். சரண்யாவின் அப்பா, 2ம் பிரதிவாதி மாதேஸ்வரியின் கணவர் அழகுவேல், 1ம் பிரதிவாதி ஆரோக்கியத்தின் உடன் பிறந்த சகோரர் என்றால் சரிதான். ஒரு சொத்து சம்பந்தமாக பணம் பெற்றுக்கொண்டு கிரையம் செய்து கொடுத்தாலோ அ்ல்லது விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தாலோ அது குறித்து பத்திரம் பதிவு செய்யவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும்.

6) சொத்தில் பாகம் உரிமை உள்ள அழகுவேல் மற்றும் பழனியம்மாள், சிவகாமி ஆகியோர் பணம் பெற்றுக்கொண்டதாக சொல்லியுள்ள நிலையில் அது குறித்து விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்யவேண்டும் என்று நான் எதுவும் சொல்லவில்லை. பைசல் நடந்த பின்னிட்டு 10 ஆண்டுகள் வரை அவரின் பெற்றோர்கள் உயிருடன் இருந்தார்கள். அந்த உயிருடன் இருந்த காலம் வரை சுமார் 10 ஆண்டுகளாக எந்தவித பாக பத்திரமோ, விடுதலை பத்திரமோ எழுதப்படவில்லை. தேவைப்படும் போது பத்திரம் எழுதி தருவதாக முத்துசாமியும், அலமேலும் சொன்னார்கள்.

7) அதற்கு எழுத்து மூலமான ஆதாரம் இல்லை. வாய்மொழியாக தான் சொன்னார்கள். அது போல் முத்துசாமி, அலமேலுக்கு பணம் கொடுத்துவிட்டதற்கு

ஆதாரமாக எழுதி எந்த பத்திரமும் பதிவு செய்யவில்லை. தாவா சொத்து முழுவதும் ஆரோக்கியத்திற்கு தான் உரிமையானது என்றும், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள்-பாகஸ்தர்கள் எவருக்கும் எந்த வித உரிமையும் தாவா சொத்துக்களில் இல்லை என்று சொல்வதற்கு எவ்வித ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

8) 1ம் பிரதிவாதி நிலத்தை ஓட்டியதற்கும், குத்தகை விட்டதற்கும் அதன் மூலம் வருமானம் வந்தற்கும் ஏதேனும் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் குத்தகை. அவ்வாறு எந்த ஆவணத்திலாவது நான் கையெழுத்து நான் போட்டுள்ளேனா என்றால் இல்லை. உயில் சாசனம் எழுதம் போது முத்துசாமி மற்றும் அலமேலுக்கு வயது சுமார் 50-55 இருக்கும். சாட்சி முதலில் 60 வயது என்று சொல்லிவிட்டு பின்னிட்டு 50-55 வயது இருக்கும் என்று சொல்கிறார்.

9) வேறு பாகஸ்தர்கள் யாரும் பணம் பெற்றுக்கொண்டு கையெழுத்து போடவில்லை என்ற நிலையில் மற்ற பாகஸ்தர்களை உயில் சாசனத்தில் ஆவது கையெழுத்து போட்டுள்ளார்களா என்றால் வாங்கியுள்ளோம். அவர்களும் எங்களுடன் உயில் சாசனம் எழுதும் இடத்திற்கு வந்தார்கள். பின்னிட்டு பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டதன் பின்னிட்டு சாட்சி அப்பா, அம்மா வந்ததாக சொல்கிறார். அந்த உயில் சாசனத்தில் பட்டுத்துறையில் உள்ள சார் பதிவாளர் அலுவலகம் இருந்த போது நான் அந்த ஊரில் பதிவு செய்ய நான் பரிந்துரை ஏதுவும் செய்யவில்லை. அவர் கூப்பிட்ட இடத்திற்கு நான் உடன் சென்றேன். என்னுடன் ஆரோக்கியம் உடன் இருந்தார்.

10) உயில் சாசனம் எழுத நாங்கள் சேலம் சென்ற போது எங்களுடன் ஆரோக்கியம் உடன் வந்தார். ஆனால் எழுதும் போது உடன் இல்லை. அவர் என்னுடன் சேலம் வந்த போது முத்துசாமியும், அலமேலும் ஆரோக்கியத்தின் பேரில் தான் உயில் சாசனம் எழுதினார். உயில் சாசனத்தை எழுதியவர் ஆத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில்

பத்திரம் எழுதும் பெருமாள் என்பவர். தலைவாசல் சார் பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் எழுதும் பத்திர எழுத்தரை அழைத்து செல்லவில்லை.

11) என்னிடம் காட்டப்படும் உயில் சாசனத்தின் 5 பக்கத்திலும் உள்ள கைரேகைளிலும், கைரேகை தெளிவாக இல்லை (Ridges) என்றால் சரியல்ல. தெளிவாக உள்ளது. மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கைரேகை அலமேலு உடையது தான். மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கைரேகை அலமேலு உடையது அல்ல என்றும், அவர் இறந்த பின்னிட்டு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

12) முத்துசாமி மூப்பனார் என்று பதிவு செய்யப்பட்ட ஆவணத்தில் போடப்பட்டுள்ள கையெழுத்து பற்றி எனக்கு தெரியாது. ஆனால் முத்துசாமி என்று உயில் சாசனத்தில் கையெழுத்து போட்டுள்ளார். மேற்படி முத்துசாமி சி. முத்துசாமி என்று கையெழுத்து போடமாட்டார் என்றும், முத்துசாமி மூப்பனார் என்று கையெழுத்து போடுவார் என்றால் அது பற்றி தெரியாது. உயில் சாசனத்தில் இருக்கின்ற முத்துசாமி என்கிற கையெழுத்தும் வழக்கிற்காக ஆள் மாறாட்டம் செய்து போடப்பட்ட கையெழுத்து என்று சொன்னால் சரியல்ல.

13) நான் உண்மையில் ஒரு உயில் சாசனம் எழுத வேண்டும் நினைத்து இருந்தால் முத்துசாமியும்ட, அலமேலும் தலைவாசல் மற்றும் ஆத்தூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தான் எழுதி பதிவு செய்யது இருப்பார்கள் என்றும், அவர் அது போல எவ்வித உயில் சாசனம் 05.01.1994 ல் எழுததால் தான் ஒரு பச்சை தாளில் முன் தேதியிட்டு எழுதப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயில் சாசனம் முத்திரை தாளில் எழுதப்படவில்லை. பச்சை தாளில் எழுதப்பட்டுள்ளது. 5 ரூபாய் ஸ்டாம்பு ஒட்டப்பட்டு டஅதில் தான் முத்துசாமியும்ட, அலமேலும் எழுதி கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் கையெழுத்து போட்ட உயிலில் ஸ்டாம்பு ஒட்டி எழுதி

கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் கையெழுத்து போட்ட உயிலில் ஸ்டாம்பு ஒட்டி எழுதி கையெழுத்து போட்ட உயில் என்னிடம் பி.வா.சா.ஆ.2 அல்ல. பாகஸ்தர்கள் போட்ட கையெழுத்தும் பி.வா.சா.ஆ.2 இல்லை. பாகஸ்தர்கள் கையெழுத்தும் போட்ட உயிலை என்னிடம் இல்லை என்று சொன்னால் ஆரோக்கியத்திடம் கேட்டால் தான் தெரியும்.

14) அந்த உயில் சாசனம் 05.01.1994 ல் எழுதி கையெழுத்து போடவில்லை என்றும், டி.எஸ் குப்புராஜ் நோட்டரி வக்கில் முன்னிலையில் உயில் சாசனம் தயாரிக்கப்பட்டு அவர் கையெழுத்தும், முத்திரையும் போடவில்லை என்றால் சரியல்ல. டி.எஸ் குப்புராஜ் நோட்டரி வக்கில் முத்திரையும், கையெழுத்தும் போலியாக தயாரித்து போடப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல சொத்துக் ஆரோக்கியத்திற்கு உரிமையானது அல்ல, அவரின் தனிப்பட்டதும் அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து தற்போது விவசாயம் செய்யாமல் சும்மாக தான் உள்ளது.

15) வழக்கு சொத்தில் உள்ள மளிகை கடையை மாதேஸ்வரி நடத்தி வருகிறார் என்றால் சரிதான். ஆரோக்கியம் தான் மளிகை கடையை கட்டினார். ஆள் துணையுடன் மாதேஸ்வரி தற்போது கடை நடத்தி வருகிறார். மாதேஸ்வரிக்கு கணவர் மகன் யாரும் ஆள் துணை இல்லாமல் தனியாக இருந்து வருகிறார் என்றால் சரிதான். மாதேஸ்வரி ஆள் துணை உடன் ஆரோக்கியத்தை விரட்டிவிட்டதாக சொல்வது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல.

16) 11.02.1998 ல் ஆரோக்கியத்தின் பெயரில் பழனியம்மாள் எழுதி கொடுத்த கிரைய பத்திரம் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. நான் பேசிவிட்டேன். பத்திரம் எழுதும் போது நான் போகவில்லை. மேற்படி சொத்தை பூர்வீக சொத்தின் வருமானத்தில் இருந்தும், மேற்படி வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகள் பணம் கொடுத்து குடும்பத்தின் 1ம் பிரதிவாதி ஆண் என்பதால் அவர் பெயரில்

வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் பத்திரம் எழுதும் போது சார் பதிவாளர் அலவலுகத்திற்கு செல்லவில்லை என்பதால் பத்திரத்திற்கு வாதிகள் மற்றும் 2,3 பிரதிவாதிகள் பணம் கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியாது.

17) வழக்கு சொத்துக்கள் எல்லாம் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றும், அவற்றை தரப்பினர்கள் ஒன்றாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், 1ம் பிரதிவாதி ஆரோக்கியத்திற்கு உயில் சாசன படி தனிப்பட்ட சொத்து என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனத்தை வழக்கிற்காக நான் ஆரோக்கியத்திற்கு உடந்தைகயாக இருந்து தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆரோக்கியத்திற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

18) மேற்படி உயில் சாசனத்தில நான் சொல்லும் ஸ்டாம்பு இது தான் என்று பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள கடைசி பக்கத்தில் உள்ள நோட்டரி ஸ்டாம்பு காண்பித்து கேட்ட போது சாட்சி இது தான் என்று சொல்கிறார்.

**<u>மறு குறுக்கு விசாரணை</u>**

19) என்னிடம் காட்டப்படும் ஸ்டாம்பின் மீது முத்துசாமி, அலமேலு கையெழுத்து இல்லை. அதற்கு மேலே உள்ளது. நான் சொல்வது போல இது 5 ரூபாய் ஸ்டாம்பு என்றும், அது 10 ரூபாய் ஸ்டாம்பு என்றால் இரண்டு 5 ரூபாய் ஸ்டாம்பு. நான் ஒரு 5 ரூபாய் ஸ்டாம்பு என்று சொன்னேன்.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S Date: 2025.04.05 17:29:42 +0530

**Subordinate Judge, Attur.**